DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | STC No.5 /2019 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Defence | : | D.W. 1 |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : செல்வம்(எ) முத்துசாமி | தொழில் | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : கருப்புசாமி | ஜாதி | |
| கிராமம் | : | இனம் | |
| தாலூக்கா | : | வயது | |
| Mail ID | : | Mobile No. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 01.11.2025.

முதல் விசாரணை

1. என் பெயர் செல்வம் என்கின்ற முத்துசாமி. நான் இருப்பது கணக்கம்பாளயைம், காந்திபுரம். அனுசம் நகரில் டாக்டர் சசிகுமார் என்பவர் வட்டிக்கு பணம் கொடுத்து கொண்டு இருக்கிறார். அதற்கு நேர் எதிராக பெஸ்ட் கார்ஸ் என்னும் நிறுவனம் நடத்தி வரும் வின்சென்ட் என்பவர் எனக்கு நண்பர். நானும் கார் டீலிங் செய்பவர். எனக்கு 2015 செப்டம்பர் செப்டம்பரில் எனக்கு பணம் தேவைப்பட்டது. நான் வின்சனிடம் கூறினேன் டாக்டர் சசிகுமார் வட்டிக்கு பணம் தருவார். ஆனால் வட்டி கொஞ்சம் அதிகம் என்று கூறினார்.
2. பின்னர் நான் டாக்டரிடம் சென்று கேட்டபோது ரூபாய் 2,00,000/- பணம் வேண்டும் என கேட்டபோது ரூ. 100 க்கு 5% வட்டி என கூறினார். நான் சரி என கூறினேன். 2 லட்சம் பணம் கொடுத்தார். அதற்கு நிரப்பப்படாத மூன்று காசோலைகள் கேட்டார். நான் கொடுத்தேன் அந்த காசோலைகளில் ஒரு காசோலையை இந்த வழக்கில் போட்டுள்ளார். இன்னொரு காசோலை அவரது நண்பர்

சென்னையில் இருந்த பொன்ராஜ் அவரிடம் கொடுத்து எனக்கு ஒரு நோட்டீஸ் 60 லட்சம் தர வேண்டும் என அனுப்பியுள்ளார்.

3. மேற்படி தொகைக்கு நான் வட்டி 2015 இல் இருந்து 2018 செப்டம்பர் வரை சரியாக கொடுத்துக் கொண்டிருந்தேன். செப்டம்பர் மாதம் ஒரு மாதம் மட்டும் என்னால் வட்டி கொடுக்க இயலாமல் இருந்தது. நான் தகவல் தெரிவித்தேன். அதற்கு அவர் ஒத்துக் கொள்ளாமல் இரண்டு நாள் கழித்து எனக்கு போன் செய்து நான் ஜி.ஆர்.கே. கார்ஸ் ஷோரூமில் இருப்பதாக கூறிய பொழுது அவர் அங்கு வந்தார்.
4. பின்னர் அங்கு அவர் ஏன் பணம் கொடுக்கவில்லை என கேட்டார் நான் சிரமமாக இருப்பதாகவும் கொடுத்து விடுவதாகவும் கூறினேன். அதற்கு அவர் ஒத்துக் கொள்ளாமல் பணம் முழுமையாக செட்டில் செய்ய வேண்டும் என கூறினார். ரூபாய் 5,50,000/– பணம் வேணும் என சொன்னார். நான் ரூபாய் 2,00,000/– பணம் தான் தர வேண்டும் என சொன்னேன். அதற்கு 10 சதவீத வட்டி போட்டு ரூபாய் 5,50,000/– பணம் செட்டில் செய்ய வேண்டும் என்று என்றும் இல்லை என்றால் மூன்று நிரப்பப்படாத காசோலைகளை வெவ்வேறு ஊர்களுக்கு அனுப்பி அதிக பணம் போட்டு உன்னை அலைகழிப்பேன் அழைப்பேன் என கூறினார்.
5. பின்னர் எனக்கு திண்டுக்கல்லிலும், திருநெல்வேலியும் அடியாட்கள் உள்ளதாகவும் அவர்களை வைத்து உன்னை காலி பண்ணி விடுவேன் பணம் கொடுக்கவில்லை என்றால் உன்னை காலி பண்ணி விடுவேன் எனவும், உனது குடும்பத்தை மிரட்டுவேன் என்றும் சொன்னார். அதற்கு பயந்து கொண்டு நான் காவல் நிலையம் சென்று இவர் கந்து வட்டி கொடுமை செய்வதாக செய்வதாகவும், என்னை மிரட்டுவதாகவும் கூறினேன். அவர்கள் எனக்கு சிஎஸ் ஆர் நகல் போட்டு கொடுத்தார்கள்.
6. மருத்துவர் விசாரிக்க சொன்ன பொழுது ஒரு நாள் வந்தார் மீண்டும் வரவில்லை. இந்த இடைப்பட்ட நாட்களில் இந்த ஒரு காசோலையை 15 லட்சத்துக்கு நிரப்பி வழக்கு போட்டுள்ளார். நான் மறுபடியும் காவல் நிலையம் சென்றேன். மருத்துவர் கேஸ் போட்டு விட்டதால் நீங்கள் நீதிமன்றத்தில் பார்த்துக் கொள்ளும் மறு காவல் நிலையத்தில் கூறி விட்டார்கள். கந்துவட்டி என்பதால் கோர்ட்டில் பார்த்துக் கொள்ளும்படி கூறினார்கள். டாக்டர் என்பதால் அவர்களுக்கு செல்வாக்கு இருப்பதால் காவல்நிலையத்தில என்னை கோர்ட்டில் சென்று பார்த்துக் கொள்ளும்படி கூறினார்கள்.
7. என்னை மட்டுமல்லாமல் நந்தி டெக்ஸ்டைல் பிரதாப், அவரது மனைவி பிந்து பெஸ்ட்கார்ஸ் உரிமையாளர் வின்சென்ட்,

ரவிச்சந்திரன் எல்லோரையும் பத்து வட்டி கேட்டு அவர் சிரமப்படுத்தி அவர்கள் மீது காசோலை வழக்கு போட்டுள்ளார். இந்த நீதிமன்றத்தில் அவர்கள் மீது போடப்பட்ட வழக்கு உள்ளது. பிரதாப்புக்கு 1 ½ கோடி, பிந்து மோலுக்கு 80 லட்சம், வின்சென்ட் 50 லட்சம், ரவிச்சந்திரனுக்கு 30 லட்சம் இவர்கள் இடம் பத்து வட்டி கேட்டு மிரட்டியுள்ளார். நான் 15 லட்சம் வாங்கவில்லை. அதற்குண்டான ஆதாரமும் அவரிடம் இல்லை. அவர் அந்த அளவிற்கு அவர் பணம் கொடுக்கவில்லை அவ்வாறு அவர் பணம் கொடுத்திருந்தால் அதற்கான இன்கம் டேக்ஸ் கட்டி இருப்பார். அவருக்கு சோர்ஸ் இல்லை. என்னை கந்து வட்டி கொடுமைப்படுத்தி சிரமப்படுத்தி உள்ளார். என்னை பொய்யான வழக்கு போட்டு இந்த வழக்கில் மாட்டிவிட்டுள்ளார். வழக்கில் இருந்து விடுவிக்குமாறு வேண்டுகிறேன்.

எதிரி தரப்பு வேண்டுகோளுக்கு இணங்க ஆவணங்கள் குறியீடு செய்ய முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala, B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.